# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.102/2017

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.1 நடராஜ முதலியார், வயது 87, த/பெ வேலு முதலியார்

**நேரம் - 1.00**

**குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் மளிகை வியாபாரம் செய்து வருகிறேன். நான் மளிகை வியாபாரம் செய்து வருகிறேன் என்பதால் நான் வியாபார சங்கம் அல்லது கட்சியில் தலைவராக உள்ளேனா என்றால் உள்ளேன், வியாபாரிகள் சங்கத்தில் நான் மாநில துணை தலைவராக உள்ளேன். இவ்வழக்கு எந்த சர்வே எண் சம்மந்தமான வழக்கு என்றால் எனக்கு அதைப்பற்றி தற்போது ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்லியுள்ள வாக்குமூலத்தில் பத்தி 4ல் சொல்லியுள்ள சர்வே எண் பற்றி தெரியுமா என்றால் அதைப் பற்றி தற்போது ஞாபகமில்லை.

2. என்னுடைய வாக்குமூலத்தில் நான் எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதைப் பற்றி தற்போது ஞாபகமில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ரேணு முதலியார் மனைவி சிவகாமி என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றாலும், அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள், 1. நாராயணன் மற்ற 2 பெயர்கள் நினைவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணம் 17.04.1970 அன்று வெங்கடாசல முதலியார், பாலசுந்தர முதலியாருக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் என்ன சர்வே எண் உள்ளது என்றால் எனக்கு நினைவில்லை.

3. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.3ல் சொத்து விவரத்தில் உள்ள சர்வே எண்ணை பார்த்து விட்டு சொல்ல முடியுமா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சர்வே எண். 160/2, 115/7 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பி. வா. சா. ஆ.3ல் 'அ'

அட்டவணை சொத்தில் சர்வே எண்.160/2ல் 5 ஏக்கர் 82 செண்ட்டை சீனிவாசன் என்பவருக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3ல் வழக்கு சம்மந்தமான சர்வே எண்.78/2 இல்லை என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை 26.06.1991 அன்று சீனிவாசனிடமிருந்து நான் கிரையம் பெற்ற சொத்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் பார்த்தால் தெரியும். பி.வா.சா.ஆ.3 சொத்தை வெங்கடாசலம் பேரன் சீனிவாசனிடமிருந்து கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால அதைப் பற்றி நினைவில்லை. பி.வா.சா.ஆ.4ல் சொத்து விவரத்தில் 160/2ல் 5 ஏக்கர் 82 செண்டில் 3 ஏக்கர் 12 செண்டைதான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4ல் வழக்கு சம்மந்தமான சர்வே எண்.78/2 இல்லை என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை 21.10.1991 அன்று சீனிவாசனிடமிருந்து நான் கிரையம் பெற்ற சொத்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப்பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.5ல் சொத்து விவரத்தில் 160/2ல் 5 ஏக்கர் 82 செண்டில் நான் 2 ஏக்கர் 70 செண்டில் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5ல் வழக்கு சம்மந்தமான சர்வே எண்.78/2 இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 சபாபதி என்பவருக்கு சிவகாமி அம்மாள் எழுதி வைத்த உயில்தான் என்றால் சரிதான்.

6. சபாபதி என்பவர் வாதி நாராயணன் என்பவரின் பெரியப்பா என்றால் சரிதான். சர்வே எண்.112/5, 163/4, 78/1 ஆகிய சொத்துக்களை மட்டும்தான் சிவகாமி அம்மாள் சபாபதிக்கு எழுதி வைத்தார் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு எனக்கு ஞாபகமில்லை என்று கூறினார். மேற்படி உயில் பத்திரத்தில் 78/2 சம்மந்தமான சொத்தை எழுதி வைக்கவில்லை என்றால் அதை எப்போதோ ஏற்படுத்த உயில் என்பதால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. சபாபதிக்கு சிவகாமி அம்மாள் எழுதி வைத்த உயிலில் 163/4 வழக்கு சொத்து சர்வே எண்.78/2 சொத்தை எழுதி வைத்தாரா என்றால் எனக்கு அதைப் பற்றி ஞாபகமில்லை.

7. பி.வா.சா.ஆ.7 ஆவணமான உயில் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயிலில் சர்வே எண்.130/2, 165/2 ஆகிய சொத்து சம்மந்தமாகதான்

உயில் எழுதி வைத்தார் என்றாலும், தாவா சொத்து 78/2 சம்மந்தமாக எழுதி வைக்கவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.8 கிஸ்து ரசீது விவரம் யார் பெயரில் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 12.01.2018 அன்று ஏற்பட்ட ஆவணம் என்றாலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட ஆவணம் என்றால் எனக்கு அதைப் பற்றி ஞாபகமில்லை.

8. தாவா சொத்தான சர்வே எண். 78/2ல் உள்ள சொத்திற்கு எனக்கும், நான் தாக்கல் செய்த ஆவணங்கள் பி.வா.சா.ஆ. 1 முதல் 9 வரையான ஆவணங்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், என்னுடைய சொத்தை சுற்றியுள்ள சொத்திற்கு பக்கத்தில் தாவா சொத்து உள்ளதால் அதை அபகரிக்க வேண்டும் என்று இவ்வழக்கில் பதிலுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தை பொய்யான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் தந்தைக்கு எழுதி வைத்த உயில் முன்னிலைக்கு வா.சா.ஆ.3படி வாதிகளுக்குதான் பாத்தியம் என்றால் சரியல்ல, எனக்கு எழுதி வைத்த சொத்தைதான் நான் அனுபவித்து வருகிறேன். ஆகையால் இவ்வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**
**நேரம் - 1.35**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni